பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
25 06 2025 6 45
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா – மொரீஷியஸ் இடையிலான நீடித்த ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இரு நாடுகளும் உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாட்டில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்ட தினம், அரசியல் சாசன படுகொலை தினமாக இன்று கடைபிடிக்கப்படுகிறது.

3. ஈரானில் சிக்கியுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக அழைத்துவர நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் குடமுழுக்கு திருவிழாவையொட்டி 400 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. செக் குடியரசில் நடைபெற்ற **Ostrava Golden Spike 2025** தடகள போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா தங்கப் பதக்கம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

இந்தியா – மொரீஷியஸ் இடையிலான நீடித்த ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இரு நாடுகளும் உறுதிபூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், மொரீஷியஸ் பிரதமர் திரு. நவீன்சந்திர ராம்கூலத்தை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேச்சுவார்த்தை நடத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது 'மஹா சாகர் தொலைநோக்குப் பார்வை' மற்றும் 'அண்டை நாட்டிற்கு முன்னுரிமை' கொள்கை அடிப்படையில் மொரீஷியசின் வளர்ச்சிக்கான முன்னுரிமை பணிகளை இந்தியா நிச்சயம் நிறைவேற்றும் என்று உறுதியளித்ததாக பிரதமர் கூறியுள்ளார்.

வளர்ச்சிப் பணிகளில் ஒத்துழைப்பு, திறன் மேம்பாடு, கடல்சார் பாதுகாப்பு, டிஜிட்டல் கட்டமைப்பு மேம்பாடு உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளிடையேயான ஒத்துழைப்பு குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டதாக பிரதமர் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் மிசா எனப்படும் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டு இன்றுடன் 50 ஆண்டுகள் நிறைவடைகிறது.

இந்நாள் அரசியல் சாசன படுகொலை தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

1975ஆம் ஆண்டு இதே நாளில் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி அவசர நிலையை அறிவித்ததன் மூலம் அரசியல் சாசனம் சீர்குலைக்கப்பட்டதை நினைவுகூறும் விதமாக இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

மேலும் அவசர நிலை காலத்தில் காவல்துறையினரின் அத்துமீறலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்நாள் கடைபிடிக்கப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் உட்கட்சியில் ஏற்பட்ட எதிர்ப்பை முறியடிக்கும் வகையில் இந்திரா காந்தியால் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்த காலகட்டத்தில் நீதிமன்ற உத்தரவுகளை நீர்த்துப்போகச் செய்யும் வகையில் நாடாளுமன்றத்தில் தொடர்ச்சியாக அரசியல் சாசன திருத்தச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டது.

இதுகுறித்து ஆகாஷ்வாணியில் ஒலிபரப்பான மன் கி பாத் நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, அவசர நிலை காலம் இந்திய வரலாற்றில் ஒரு இருண்ட அத்தியாயம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் காலகட்டத்தில் நாடு முழுவதும் சுமார் ஒரு கோடியே 7 லட்சத்திற்கும் அதிகமான கட்டாய கருத்தடை அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், சமார் 26 ஆயிரத்திற்கும் அதிகமான அரசு மற்றும் பொதுத்துறை நிறுவன ஊழியர்களுக்கு கட்டாய ஓய்வும் அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

இந்திய மக்கள் சர்வாதிகாரத்தை ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டதன் 50ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், அவசர நிலை நாட்டைப் பாதுகாப்பதற்காக அமல்படுத்தப்படவில்லை என்றார்.

மாறாக அப்போதை பிரதமர் இந்திரா காந்தி ஆட்சியை தக்கவைத்துக் கொள்வதற்காக இதனை அமல்படுத்தியதாக அவர் குற்றம் சாட்டினார்.

நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தில் லட்சக்கணக்கானோர் தங்களது உயிர், வாழ்க்கை மற்றும் குடும்பங்களை தியாகம் செய்ததை நாட்டு மக்கள் நினைவில் கொள்ள வேண்டும் என்றும் திரு. அமித் ஷா கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

ஈரானில் சிக்கியுள்ள தமிழக மீனவர்களை மீட்டு அழைத்துவர தூதரக ரீதியில் நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், தமிழகத்தின் கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த 651 மீனவர்கள் ஈரானில் சிக்கியிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் ஈரான் இடையேயான தாக்குதல் காரணமாக இந்த மீனவர்கள் தாயகம் திரும்ப முடியாமல் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி வருவதாகவும் முதலமைச்சர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

<<<<>>>>

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் குடமுழுக்கு திருவிழாவையொட்டி அடுத்த மாதம் 4ஆம் தேதி முதல் 8ஆம் தேதி வரை 400 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவில், மதுரை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து வரும் 4ஆம் தேதி பிற்பகல் முதல் இந்த சிறப்புப் பேருந்துகள் திருச்செந்தூருக்கு இயக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சிறப்புப் பேருந்துகளை இயக்க ஏதுவாக திருச்செந்தூரில் 3 இடங்களில் தற்காலிக பேருந்து நிறுத்தம் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இந்த பேருந்து நிறுத்தங்களில் இருந்து திருச்செந்தூர் கோவில் வாசல் வரை பக்தர்கள் செல்வதற்கு வசதியாக 30 கட்டணமில்லா சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலும் சென்னை, திருச்சி, கும்பகோணம், காரைக்குடி, புதுக்கோட்டை, கோவை, சேலம், திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட இடங்களில் இருந்து திருச்செந்தூருக்கு வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பயணிகளின் கூட்ட நெரிசலை தவிர்க்க முன்பதிவு செய்துகொள்ளுமாறும் திரு. சிவசங்கர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

வேலூரில் அமைக்கப்பட்டுள்ள பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை இன்று திறக்கப்பட உள்ளது.

560 படுக்கை வசதிகள் மற்றும் நவீன் அறுவை சிகிச்சை அரங்குகளுடன் கூடிய இந்த மருத்துவமனை, வேலூர் மற்றும் சுற்றுவாட்டாரப் பகுதி மக்களுக்கு பேருதவியாக இருக்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அருகே நேற்றிரவு ஏற்பட்ட சிக்னல் கோளாறு காரணமாக திருநெல்வேலி – மதுரை வழித்தடத்தில் சுமார் 3 மணி நேரம் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதனால் சென்னை – குருவாயூர் எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட பல்வேறு ரயில்கள் ஆங்காங்கே நிறுத்திவைக்கப்பட்டு சிக்னல் கோளாறு சரிசெய்யப்பட்ட பிறகு புறப்பட்டுச் சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

இஸ்ரேல் – ஈரான் இடையே போர்நிறுத்தம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருப்பதை ஐ.நா. பொதுச்செயலாளர் திரு. ஆண்டனியோ குட்ரெஸ் வரவேற்றுள்ளார்.

<<<<>>>>

இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா உள்ளிட்டோர் பயணம் செய்யும் **Axiom-4** விண்கலம் இன்று பிற்பகல் மணி 12.01க்கு விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

<<<<>>>>

ஆந்திர மாநிலத்தில் கட்டுமானப் பணி விதிகளைத் தளர்த்தி அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் பெற்றோர் இல்லாத 2 லட்சத்து 82 ஆயிரம் குழந்தைகளுக்கு மாதந்திர நிதியுதவி வழங்கும் அன்புக் கரங்கள் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதாக சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் கூறியுள்ளார்.

<<<<>>>>

நெல்லை மாவட்டம் மாஞ்சோலை வனப் பகுதியை பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக மாற்றுவதற்கான நடவடிக்கைகள் குறித்து உச்சநீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட மத்திய அரசின் உயர்மட்டக் குழுவினர் நேற்று நேரில் ஆய்வு செய்தனர்.

<<<<>>>>

திருப்பூர், தாராபுரம், உடுமலைப்பேட்டை அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர விரும்பும் 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் சம்பந்தப்பட்ட பயிற்சி நிலையங்களை தொடர்புகொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் திரு. கிறிஸ்துராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற ரத்ததான முகாமை ஆட்சியர் திரு. தர்ப்பகராஜ் தொடங்கி வைத்து ரத்த தானம் செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கினார்.

<<<<>>>>

இந்திய தர நிர்ணய அமைவனம் சார்பில் ஆசிரியர்களுக்கான தர நிலை அறிவியல் கற்றல் குறித்த பயிற்சி முகாம் கள்ளக்குறிச்சியில் நடைபெற்றது.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டம் தக்கோலம் பேரூராட்சியில் நபார்டு திட்டத்தின்கீழ் சாலை அமைக்கும் பணிகளை மாநில அமைச்சர் திரு. ஆர். காந்தி தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

சென்னை மாநகரில் மழைநீர் தேக்கத்தை தவிர்த்து நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்திடும் வகையில் நடப்பாண்டில் 41 குளங்களில் 119 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்புப் பணி மேற்கொள்ள உள்ளதாக மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

செக் குடியரசில் நடைபெற்ற **Ostrava Golden Spike 2025** தடகள போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா தங்கப் பதக்கம் வென்றார்.

<<<<>>>>

புவனேஸ்வரில் நடைபெற்ற தேசிய நீச்சல் சாம்பியன் போட்டியில் கர்நாடகாவின் **Rujula** புதிய தேசிய சாதனை படைத்துள்ளார். இப்போட்டியில் **Aryan Nehra, Kushagra Rawat** மற்றும் **Aneesh Gowda** ஆகியோர் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

<<<<>>>>

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

**<<<<The End>>>>**